<u>**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**</u>

<u>**C.C.No.128/2019**</u>

2025 ம் ஆண்டு ஜூலை மாதம் 03 ஆம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி–03, திரு.சீமான் என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கோவிந்தராஜ், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சீமான் | வயது | : | |
| த.பெ/ க.பெ. | : | தம்புசாமி | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | LW03 / PW03 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**( எதிரி ஆஜர் இல்லை. அவர் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது )**

**முதல் விசாரணை:**

நான் சூரியமணலில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன பாலுச்சாமியை தெரியும். அசா1, அசா2 ஐ தெரியும். 28.03.2019 ம் தேதி இரவு 09.30 மணியளவில், பாலுச்சாமி சைக்களில் சூரியமணலில் உள்ள வீட்டிற்கு செல்வதற்காக ஜெயங்கொண்டம் முதல் திருச்சி ரோட்டில், ஜெயங்கொண்டத்திலிருந்து மேற்கு நோக்கி செல்லும்போது, அருமை வீட்டின் அருகில் வைத்து, அதே சாலையில் Hero Honda இருசக்கர வாகனத்தை மணிமாறன் அதிவேகமாக ஓட்டி வந்து, அவர் ஓட்டி வந்த வாகனத்தில் விளக்கு இல்லாத காரணத்தினால் பாலுச்சாமியின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார். எனக்கு பாலுச்சாமியின் தம்பி செல்வம் போன் மூலம் தகவல் சொன்னார். நான் வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்தேன். பின்னர் சம்பவ இடம் சென்று அடிப்பட்ட பாலுச்சாமியையும், விபத்தை ஏற்படுத்தி லேசான காயம் இருந்த மணிமாறனையும் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்சில் அனுப்பி வைத்தோம். பின்னர் அங்கு பார்க்க முடியாது என்று சொன்னதால் தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தோம். மறுநாள் நள்ளிரவு 01.00 மணியளவில், மேற்படி பாலுச்சாமி சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பாலுச்சாமியின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தபோது நானும் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்தார்கள். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. சம்பவ இடத்தில்மணிமாறன்இருந்தார் என்றும், அவருக்குகாயம் ஏற்பட்டது என்றும், அவரை 108 ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. நான் தஞ்சாவூர் செல்லவில்லை. தஞ்சாவூர் மருத்துவமனையில் என்ன நடந்தது என்று நேரடியாக எனக்கு தெரியாது. பிரேத விசாரணை சம்மந்தமாக நான் காவல் துறையிடம் கையெழுத்து எதுவும் போடவில்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் வடக்குபக்கம் ஒரு சாலையும், தெற்கு பக்கம் ஒருசாலையும் திரும்பும் இடம் என்றால்சரிதான். போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் என்னுடன்ஜெயராஜ் இருந்தார் என்று நான் சொல்லவில்லை.மணிமாறன் வாகனத்தில் விளக்கு எறியவில்லை என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை. தெருவிலிருந்து மெயின்ரோட்டில் திரும்பி சாலைக்கு தென்புறம் பாலுச்சாமியின் தாய் வீடு இருந்தது, தற்போது இல்லை. தெரு முக்கம் பார்த்து திரும்பவேண்டும், நிறைய வண்டி வாகனங்கள் திரும்பும் இடம் என்றால் சரிதான். பாலுச்சாமி எனது பங்காளி. பாலுச்சாமி எனது பங்காளி என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், இந்த சம்பவத்திற்கும் மணிமாறனுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/–S.தனலெட்சுமி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 (மு.கூ.பொ),
ஜெயங்கொண்டம்.